பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

17 02 2025 7 15

திங்கட்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் புதிய தலைமைத் தேர்தல் ஆணையரை தேர்வு செய்வதற்கான தேர்வுக் குழுவின் கூட்டம் இன்று நடைபெற உள்ளது.

2. இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் நிலைத்தன்மையை உறுதி செய்ய, ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

3. கும்பமேளாவில் பங்கேற்கும் பக்தர்களின் வசதிக்காக புதுதில்லியில் இருந்து பிரயாக்ராஜுக்கு இன்று மேலும் 5 சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகிறது.

4. தில்லியில் இன்று அதிகாலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.

5. மகளிர் ப்ரீமியர் லீக் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் உத்தரப்பிரதேச அணியை வென்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

நாட்டின் புதிய தலைமைத் தேர்தல் ஆணையரை தேர்வு செய்வதற்கான தேர்வுக் குழுவின் கூட்டம் இன்று நடைபெற உள்ளது.

தற்போதைய தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ் குமாரின் பதவிக் காலம் நாளையுடன் நிறைவடைகிறது.

இதையடுத்து புதிய தலைமைத் தேர்தல் ஆணையரை தேர்வு செய்வது குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய அமைச்சர் ஒருவர் மற்றும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி ஆகியோர் அடங்கிய தேர்வுக் குழு பிரதமரின் இல்லத்தில் இன்று கூடி ஆலோசனை நடத்த உள்ளது.

தற்போதை தேர்தல் ஆணையர்களில் பணி மூப்பில் உள்ளவரான திரு. ஞானேஷ்குமார் புதிய தலைமைத் தேர்தல் ஆணையராக தேர்வு செய்யப்பட அதிக வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

<<<<>>>>

இந்தியப் பெருங்கடல் பிராந்திய நாடுகளுக்கு இடையேயான போக்குவரத்து இணைப்பு வசதிகள் கூட்டு ஆலோசனை மற்றும் வெளிப்படைத்தன்மை அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ். ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

மஸ்கட்டில் நடைபெற்ற 8வது இந்திய பெருங்கடல் பிராந்திய மாநாட்டில் பேசிய அவர், இந்தியா — மத்திய கிழக்கு — ஐரோப்பிய நாடுகளிடையேயான பொருளாதார பெருவழித்தடம் மற்றும் இந்தியா - மியான்மர் - தாய்லாந்து இடையேயான நெடுஞ்சாலைப் பணிகள் செயல்படுத்தப்படுவதை சுட்டிக்காட்டினார்.

இந்தப் பிராந்தியத்தில் நிலைத்தன்மையை உறுதி செய்ய, ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டின் இடையே திரு. ஜெய்சங்கர், பங்களாதேஷ் வெளியுறவுத்துறை ஆலோசகர் திரு. முகமது தௌஹீத் உசேன், மாலத்தீவு, மொரீஷியஸ், நேபாளம், இலங்கை மற்றும் பூடான் நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களையும் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

<<<<>>>>

அனைத்து மாநில நீர்வளத்துறை அமைச்சர்கள் மாநாடு ராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் நாளை தொடங்குகிறது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் இந்தியாவின் தண்ணீர் பாதுகாப்பு மற்றும் எதிர்கால தேவைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட உள்ளது.

நவீன நீர் மேலாண்மை முறைகள், தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துதல், மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப் பகிர்வு, புதுமையான நீரோடை திட்டங்களுக்கு நிதியுதவி அளித்தல், இத்துறை சார்ந்த பணிகளில் மக்கள் பங்கேற்பை அதிகரிப்பது குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது.

மேலும் போபாலில் கடந்த 2023ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின் செயலாக்கம் குறித்தும் இந்த மாநாட்டில் ஆய்வு செய்யப்படும் என மத்திய ஜல்சக்தி துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்...

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் நேற்று ஒருநாளில் மட்டும் ஒரு கோடியே 49 லட்சத்திற்கும் அதிகமானோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி இருப்பதாக அம்மாநில முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் கூறியுள்ளார்.

கும்பமேளா தொடங்கியதில் இருந்து இதுவரை 52 கோடியே 96 லட்சத்திற்கும் அதிகமானோர் நீராடி இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கும்பமேளாவில் பங்கேற்கும் பக்தர்கள் அனைவரும் தூய்மையைக் கடைபிடிப்பதுடன், அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு அளிக்குமாறும் திரு. யோகி ஆதித்யநாத் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனிடையே பிரயாக்ராஜ் செல்லும் பக்தர்களின் வசதிக்காக புதுதில்லியில் இருந்து இன்று மேலும் 5 சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று வடக்கு ரயில்வே அறிவித்துள்ளது.

அத்துடன் புதுதில்லி ரயில் நிலையத்தில் இருந்து பிரயாக்ராஜ் செல்லும் ரயில்கள் அனைத்தும் 16ஆம் எண் நடைமேடையில் இருந்து இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணிகள் அனைவரும் ரயில் நிலையத்திற்கு வருவதற்கும், வெளியேறுவதற்கும் அஜ்மீரி கேட் நுழைவு வாயிலைப் பயன்படுத்துமாறும் ரயில்வே துறை கேட்டுக்கொண்டுள்ளது.

பிரயாக்ராஜ் செல்லும் பயணிகளை ஒழுங்குபடுத்துவதற்கென புதுதில்லி ரயில் நிலையத்தில் ரயில்வே பாதுகாப்புப் படை மற்றும் ரயில்வே காவல்துறையினர் கூடுதலாக பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், இவர்கள், பயணிகள் செல்ல வேண்டிய நடைமேடை குறித்து வழிகாட்டுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

இந்திய - ஜப்பான் ராணுவ கூட்டுப் போர்ப் பயிற்சி ஜப்பானின் **Mount Fuji** பகுதியில் இம்மாதம் 25ஆம் தேதி தொடங்கி அடுத்த மாதம் 9ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டுப் போர்ப் பயிற்சிக்கு **Dharma Guardian** என்று பெயரிடப்பட்டுள்ளது.

ராணுவத் தளபதி ஜெனரல் உபேந்திர திவிவேதி கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் மேற்கொண்ட ஜப்பான் பயணத்தின் தொடர்ச்சியாக, இருநாட்டு ராணுவ ஒத்துழைப்புகளை வலுப்படுத்தும் நோக்கில் இந்த பயிற்சி மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்த தகவல் இந்திய ராணுவத்தின் சமூக வலைதளப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தில்லி புதிய முதலமைச்சரைத் தேர்வு செய்வதற்கான கூட்டம் நாளை மறுநாள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அம்மாநிலத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிஜேபி சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் இன்று நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது தேதி மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் புதிய முதலமைச்சர் தேர்வு செய்யப்பட்டவுடன் மறுநாளே பதவியேற்பு விழா நடைபெறும் என்றும் தில்லி பிஜேபி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

<<<<>>>>

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியதாகக் கூறி திருப்பி அனுப்பப்பட்ட மேலும் 112 இந்தியர்கள் நேற்றிரவு தனி விமானம் மூலம் அமிர்தசரஸ் வந்தடைந்தனர்.

இவர்களில் 44 பேர் ஹரியானாவையும், 33 பேர் குஜராத்தையும், 31 பேர் பஞ்சாபையும் சேர்ந்தவர்கள் ஆவர்.

உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த இருவரும், உத்தராகண்ட் மற்றும் ஹிமாச்சலப்பிரதேசத்தைச் சேர்ந்த தலா ஒருவரும் இதில் அடங்குவர்.

பின்னர் இவர்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்பட்டு, அவரவர் சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக அமிர்தசரஸ் மாவட்ட ஆட்சியர் திருமதி சாக்ஷி சஹானி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தில்லியில் இன்று அதிகாலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் இது 4 புள்ளிகளாக பதிவாகியுள்ளது.

திடீரென ஏற்பட்ட நிலநடுக்கத்தால் தில்லி தேசிய தலைநகர் பிராந்தியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது.

புதுதில்லி ரயில் நிலையத்தில், அதிவேக விரைவு ரயில் வருவதைப் போன்ற அதிர்வு ஏற்பட்டதாக அங்கு காத்திருந்த பயணிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

கத்தார் நாட்டின் அமீர் திரு. ஷேக் தமீம் பின் ஹமத் அல்-தானி இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

இது கத்தார் அமீர் இந்தியாவில் மேற்கொள்ளும் இரண்டாவது சுற்றுப்பயணம் ஆகும்.

இதற்கு முன்பு கடந்த 2015ஆம் ஆண்டு அப்போதைய அமீர் இந்தியா வந்தார்.

அமைச்சர்கள், அதிகாரிகள் மற்றும் தொழில்துறையினர் உள்ளிட்ட உயர்மட்ட தூதுக் குழுவினருடன் வரும் கத்தார் அமீரைக் கவுரவிக்கும் விதமாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவருக்கு நாளை விருந்தளிக்கிறார்.

பின்னர் அவர் பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் இருதரப்பு ஒத்துழைப்புகள் குறித்து விரிவான பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்பின் திட்டப்படி காஸா பகுதி மறுகுடியமர்வுக்கான நடவடிக்கைகளை இஸ்ரேல் அரசு மேற்கொண்டு வருவதாக அந்நாட்டு பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாஹு கூறியுள்ளார்.

ஜெருசலேமில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. மார்கோ ரூபியோவை சந்தித்து ஆலோசனை நடத்தியபின் அவர் இதனைத் தெரிவித்துள்ளர்.

காஸா பகுதியில் இருந்து ஹமாஸ் அமைப்பினர் முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும் என்பதே இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மகளிர் ப்ரீமியர் லீக் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் உத்தரப்பிரதேச அணியை வென்றது.

வதோதராவில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் களமிறங்கிய உத்தரப்பிரதேச அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 143 ரன் எடுத்தது.

பின்னர் களமிறங்கிய குஜராத் அணி 18 ஓவரிலேயே 4 விக்கெட்டுகளை மட்டும் இழந்து வெற்றி இலக்கான 144 ரன்னை எடுத்தது.

இன்றைய நடைபெறும் போட்டியில் தில்லி அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

<<<<>>>>

ப்ரோ லீக் ஹாக்கிப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா 2-0 என்ற கோல் கணக்கில் ஸ்பெயின் அணியை வென்றது.

புவனேஸ்வரில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் இந்திய வீரர்கள் மன்தீப் சிங் மற்றும் தில்ப்ரீத் சிங் ஆகியோர் தலா ஒரு கோல் அடித்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்தனர்.

நாளை நடைபெறும் இரண்டாவது ஆட்டத்தில் இந்திய ஆடவர் அணி ஜெர்மனியையும், மகளிர் அணி, ஸ்பெயின் அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<>>>>

ரஞ்சி கோப்பை கிரிக்கெட் போட்டியில் இன்று இரண்டு அரை இறுதி ஆட்டங்கள் நடைபெற உள்ளன.

அகமதாபாதில் இன்று காலை மணி 9.30க்கு தொடங்கும் ஆட்டத்தில் குஜராத் அணி கேரள அணியை எதிர்கொள்கிறது.

நாக்பூரில் நடைபெறும் மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் விதர்பா அணி மும்பை அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி காலை மணி 9.30க்கு தொடங்குகிறது.

**<<<<The End>>>>**